பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

“பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தென, எழுநா எச்சில்,
மெச்சினா னுளும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
‘நச்சினார்க் கினியன்’ எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்”

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } அக்ஷய-௵ ஆடி-௴ / 1926-௵ ஜுலை-௴ { பகுதி 7.

பரமன் துதி.

திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே. (௧)

சிறந்த மெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பொன்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்க பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே. (௨)

உமறுப்புலவர்.

மருவி வழங்கும் சில சொற்கள்.

தமிழ்மொழி பேசும் அந்தணரும் பிறரும் உபயோகித்து வரும் சில தமிழ்மொழிச் சொற்களும் வேற்று மொழிச் சொற்களும், அவற்றின் உண்மை நிலையில் வழங்கப்படாமல், சிதைவுற்றோ, மரூஉ மொழிகளாகவோ வழங்கப்பட்டு வருகின்றன. இங்ஙனம் அவை வழங்கப்பட்டு வருவதால், அச்சொற்களின் வடிவமும், பொருளும் அறிவதற்கொண்ணாதனவாய்த் திசைச் சொற்கள் போல் தோற்றுகின்றன. அவ்வாறு தோன்றும் சொற்களிற் சிலவற்றையும், அவற்றிற்கு அப் பெயர் அமைந்த காரணத்தையும் அறியாதார் அறியவும், மறந்திருப்போர் நினைப்புறவும் கீழ்க்குறிக்கிறோம்.

'ஆம்படையான்', 'ஆம்படையாள்' என்பன, முறையே 'கணவனை'யும் 'மனைவி'யையும் குறிக்கும் சொற்கள். இவ் விருசொற்களும் முறையே 'அகமுடையான்', 'அகமுடையாள்' என்பவற்றின் திரிபு. 'அகம்' என்பதற்கு 'வீடு' என்பது பொருளாதலின், அவை, 'வீட்டுக்குரியவன்', 'வீட்டுக்குரியவள்' எனப் பொருள்படும். 'ஆத்துக்காரர்', 'ஆத்துக்காரி' என்பனவும் இவ்வாறே 'அகத்துக்காரன்', 'அகத்துக்காரி' என்பவற்றின் திரிபென்றும், அவை 'மனைக்குரியான்' 'மனைக்குரியாள்' என்று பொருள்படும் என்றும் உணர்க.

சிலர், 'மகனுடைய மனைவி'யை 'மாட்டுப்பெண்'என்பர். வேறு சிலர் இங்ஙனம் கூறுவோரைப் பரிகசித்து, "மாட்டின் பெண்ணு? ஆட்டின் பெண் யார்?" எனப் பலவாறு கூறி, அதை "நாட்டுப் பேண்' எனத் திருத்துவர். அங்ஙனமாயின் 'நகரப் பேண்' யார் என்று கேட்பார்க்கு இத்தகையோர் யாது விடை கூறுவரோ அறியேம். எமக்கு 'மாட்டுப்பெண்' என்பதே சரி எனப்படுகிறது. ஏனெனில், 'மாடு' என்ற சொல்லுக்குப் 'பக்கம்' என்பது பொருள். ஆதலின் 'மாட்டுப்பெண்' என்பது, 'சொந்த வீட்டுப்பெண்ணாகிய மகளைக் குறியாது, பக்கப்பெண் (அயல்வீட்டுப் பெண்)ணாகிய' மருமகளைக் குறித்ததாகும். 'மருமகள்' என்பது வினைத்தொகையாய், மருவுமகள்: 'வேறு வீட்டிலிருந்து வந்து மருவிய மகள்' எனப் பொருள்படும்.

'அம்மாஞ்சி' என்பது மாமன் மகனைக் குறிக்கும் சொல் என்பதை யாரும் அறிவர். இது 'அம்மான் சேய்' என்பதன் திரிபு. 'சேய்' என்பதற்கு 'மகன்' என்பது பொருளாதலின், மாமன் மகனை அது குறித்தல் காண்க.

'தம்பி' என்பது, 'தம்பின்' என்பதன் குறைவு. 'தமக்குப்பின் பிறந்தவன்' என்பது அதன் பொருள். 'தம்முன்' என்பது தமக்கு முன் பிறந்த தமையனை உணர்த்தி நிற்றலைக்கொண்டு இதன் உண்மையை அறிக.

'ஓராத்தா' 'ஓர்ப்படியா' என்பன சகோதரர் மனைவியர்க்குள்ள பரஸ்பர உறவைக் குறிக்கும் சொற்கள். இவை முறையே 'ஓர் அகத்தாள்' 'ஓர்படியாள்' என்பவற்றின் திரிபுகள். 'ஓர் அகத்தாள்' என்பதற்கு 'ஒரு வீட்டுக்குரியாள்' என்றும், 'ஓர்படியாள்' என்பதற்கு 'ஒரே நிலையில் உள்ளவள்' என்றும் பொருள். சகோதர மனைவியர்களில் ஒருத்தி எவ்வீட்டுக்குரியவளோ அதே வீட்டுக்கு மற்றவளும் உரியளாதலானும்; உரிமை, சுதந்தரம் முதலியவற்றில் ஒருத்தியைப்போலவே மற்றொருத்தியும் ஏற்றத்தாழ்வின்றி ஒரு நிலையில் உள்ளவளாதலானும் அப்பெயர் அமைந்த பொருத்தத்தை உய்த்துணர்க.

(இன்னும் வரும்) பத்திராதிபர்.

சேரமான் பெருமாள் நாயனார்.

(171-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பாணபத்திரனுக்குப் பல்வளமளித்தல்.

*திருமகட்கொரு தாமரைக் கூடமே; திருமால்
மருமகட்குவெண் டாமரை மாடமே; வானத்
தருமகட்குயோ கத்தனிப் பீடமே; தரையாம்
பெருமகட்கணி திலகமே; மதுரையேன் பேரூர்.

என்று சிறப்பித்துச் சொல்லப்படும் மதுரையம்பதியில், வரகுண பாண்டியன் என்னுமோர் அரசன் அரசியற்றும் நாளிலே, பாணபத்திரன் என்பானோரிசைவல்லான் அப்பாண்டியன் அரசவையில் இசைபாடும் தொழிலில் அமர்ந்திருந்தான். அன்னான் கண்ணிமைத்

* திருவிளையாடற் புராணம்.

தல்; கழுத்துவீங்கல், பல்வெளிப்படல், கதுப்புத்துடித்தல் முதலிய உடற்றொழிற் குற்றங்களும் மற்றும் பாடற்றொழிற் குற்றங்களும் இல்லாவண்ணம், எழுது சித்திரம் போலிருந்து, யாழோசையும் மிடற்றோசையும் பருந்தும் நிழலும்போல ஒற்றுமைப்படப் பல்லோரும் வியக்கப் பாடும் பண்பினன்; சிவபெருமானிடத்துச் சிறந்த மெய்யன்பு பூண்டவன். தேவர் முனிவர் முதலாயினோர் யாவரும் தமக்கு ஆட்செய்யவிருக்குஞ் சிவபெருமான் அவன் பக்திக்கும் பாடலுக்கும் ஈடுபட்டு ஒருகாலத்துத் தம்முடைய அருமைத் திருவடிகள் நோவ வந்து அவனுக்காட் செய்து அவன் குறையைத் தீர்த்துவைத்தாரென்றால் அவனுடைய அருமை பெருமைகள் அளவிடற்பாலனவோ?

தன் பாடற்றிறத்தாலும் பக்தியின் விசேடத்தாலும் சிவபெருமானையும் ஆட்கொண்ட அவ்விசை வல்லாளனின் உயர்வைக் கருதி, ஒருநாள், வரகுணபாண்டியன், "இனி இவன் நம் அரசவையில் யாழ் வாசிக்கும் இயல்பினனல்லன்" என்றுட்கொண்டு, அப்பெரியாற்குத் தக்க பொருளீந்து சோமசுந்தரக் கடவுள் ஆலயத்திற்குத் தினந்தோறும் சென்று, அவர் திருமுன்பு இசைபாடி வரும்படி அவரை வேண்டிக்கொண்டான். அப்பாணனும் அவ்வாறு இசைபாடும் நியமம் பூண்டு ஒழுகி வருவானாயினன். தனக்கு அத்தொழிலில் வருவாயில்லாமையால், அவன் நாளடைவில் அரசவையில்பெற்ற செல்வங்களையெல்லாம் விற்றுச் செலவழித்து வறுமையடைந்தான். அது கண்ட சுந்தரர், பொறுக்கலாற்றாது, பாண்டியன் பொன்னறையிலுள்ள பொற்காசுகளைத் தினந்தோறும் ஒருவருமறியாவண்ணம் கொணர்ந்து பாணனுக்குத் தந்துதவும் தகைமையராயினர். அவற்றைக்கொண்டு பாணனும் வாழ்ந்து வருவானாயினன். இவ்வாறு உதவி வந்த சிவபெருமான், சிலகாலஞ்சென்ற பின்னர், பாணனுக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நாம் இதுகாறும் பாண்டியன் பொன்னறையினின்று பொருள்களைப் பிறரறியாமற் கொணர்ந்து தந்துதவினோம். இனியும் அவ்வாறு செய்யின், பாண்டியன் தன் பண்டாரத்தைப் பார்க்குங்கால் சிறிது சந்தேகம் கொள்ளநேரும். 'உட்காப்பும் புறக்காப்பும் கயற்குறியும் இருக்கும் நம் பொருள்களைக் கவர்ந்து செல்லுதல் ஓர் அற்புதமே. இவ்விதம் கவர்ந்து செல்லும் கள்வன், உயிர்தொறும் ஒளிக்கும் கள்வனே யாவான் கொல்! அறியேனே.' என்று தனக்குள் சொல்லிக் கவலைகொள்வான். அன்றி

யும், சிரபராதிகளான பொன்னறைக் காவலாளர்களுக்கு அவன் தண்டனை விதிக்கினும் விதிக்கும். ஆதலால், யான் ஒன்று சொல்வல்; அவ்விதமே செய்வாய். நம்பால் உன்னைப்போலவே அன்புகொண் டொழுகும் அடியானொருவன், செங்கோற்பொறையன் தோன்றல், சேரர் குலத்திறைவன், சேரமான்பெருமாள் என்பான் கொடுங் கோளூரிலிருந்து செங்கோல் செலுத்தி வருகின்றான். அச் சேரமா னுக்கு நாம் இப்பொழுது ஒரு ஓலை எழுதித் தருவோம். அதனைத் தாழ்க்காமற்கொண்டு சென்றுவருதி. உனக்குப் பொன், இரத்தினம், பட்டாடை முதலிய எல்லாவற்றையும் சேரன் தந்துதவுவான்.'' என்று திருவாய் மலர்ந்தருளி, திருமுகப் பாசுரம் ஒன்று எழுதிக் கொடுத்து மறைந்தருளினர். அத் திருமுகப் பாசுரம் வருமாறு:—

"* மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற(கு)
அன்னம் பயில்பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
†பருவக் கொண்மூப் $ படியெனப் பாவலர்க்(கு)
உரிமையின் உரிமையி னுதவி § யொளிதிகழ்
× குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
‖ செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க.
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே'.'

பாணபத்திரன், கடவுள் திருவருளைக்குறித்து வியந்து திரு முகத்தையேற்று, பட்டுவஸ்திரத்தினலே சுற்றி, தலைமேற் சுமந்து திருக்கோயிலை வலம்வந்து வணங்கியெழுந்து, அப்பொழுதே மேற் றிசையை நோக்கி நடந்து, மலைநாட்டைக் கடந்துசென்று, திருவஞ் சைக் களத்தையடைந்து அங்கே ஒரு தண்ணீர்ப்பந்தலில் தங்கி

* மதிமலி புரிசை—சந்திரன் தவழ்ந்து செல்லும் மதில்கள்
† பருவக்கொண்மூ—கார்காலத்து மேகம். $ படி—குணம்.
§ ஒளி - புகழ்; × குருமாமதி புரை - ஒளிபொருந்திய பூரண சந்திரனை ஒத்த; ‖ செருமா உகைக்கும் - யுத்தகளத்தில் (பட்டத்து) யானையைச் செலுத்துகின்ற; குதிரையுமாம்.

னன். அன்றிரவு, திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், சேரமான் பெருமாணையனருக்குக் கனவிலே தோன்றி, "உன்னிடத்தில் வந்திருக்கின்ற நாம், மதுரையிற் சித்தர். உன்னைக்கண்டு திரவியம் வாங்கும்பொருட்டு நம்முடைய பாணபத்திரன் நாம் விடுத்த ஓலையைக்கொண்டு இங்கே வந்திருக்கின்றான். ஆதலால் அரசனே! அவனுக்கு வேண்டும் திரவியங்களைக் கொடுத்தனுப்புவாய்" என்று சொல்லி மறைந்தருளினர்.

சேரமான் பெருமாணையனர், விழித்தெழுந்து, இரவில் தாம் கண்ட கனவைத் தம்மவர்களுக்குத் தெரிவித்தார். மற்றும், பாணபத்திரனைத் தேடிவரும் பொருட்டு, நாற்புறத்தும் ஏவலாளர்களை விடுத்தார். ஏவலர் பாணபத்திரனை எங்கும் தேடித் தண்ணீர்ப்பந்தலில் இருக்கக்கண்டு, விரைந்தோடி அச்செய்தியை நாயனருக் கறிவித்தார். உடனே சேரமான் பெருமாணையனர் சேனையோடு புறப்பட்டுச்சென்று பாணபாத்திரனைக் கண்டார்.

*" கண்டனர் முகிழ்த்தகைக் கமலச் சென்னிமேற்
கொண்டனர் பாடினர் கூத்து மாடினர்
தண்டென வீழ்ந்தனர் அன்பிற் றண்கரு
வண்டென மகிழ்ந்தனர் மன்னர் மன்னவர்."

*" வாங்கினர் திருமுக(ம்) மலர்க்கண் ஒற்றினர்
தாங்கினர் முடிமிசைத் தாமம் போல்மகிழ்
தூங்கினர் தடங்கணீர் துளிப்ப மெய்யெலாம்
வீங்கினர் பொடிப்பெழ வேந்தர் வேந்தரே."

இவ்விதம் இன்பக்கடலில்மூழ்கி பாணபத்திரனைப் பார்த்து, "சுவாமி! தேவரீர் அடியேனை ஒரு பொருளென மதித்துத் திருமுகம் கொண்டுவந்தீரே" என்றுகூறி மேலே பேசமுடியாமல் மொழி குழற, பரவசராய்ப் பூமியிலே பலமுறை விழுந்தார்; திருமுகத்தைப் பலதரம் வணங்கி, அதனை வாசித்து, திருவருளைக் குறித்துத்துதித்து அதனைப் பொற்றளிகையில் வைத்து, யானைமேலேற்றிப் பாணபத்திரனை முன்னிருக்கிக், தாம் பின்னிருந்து, வெண்சாமரம் வீசிக்கொண்டு, நானாவித வாத்தியங்கள் கலிக்க, நகரி வலம்வந்து, பெண்கள் மங்கலம் ஏந்திக்கொண்டு எதிர்வரச் சென்று, தமது திருமாளிகையினுள்ளே புகுந்தார். அங்கே பாணபத்திரனை ஸ்நானம் செய்வித்து, ஆசனத்திருத்தி, அருச்சனைபுரிந்து, திருவமுது செய்வித்தார்; பின்னர்க் கலவைச்சாந்து பூசி, வெற்றிலையும் பாக்கும் முக

* திருவிளையாடற் புராணம்.

வாசமும் நல்கினார். நாயனார் தம் மந்திரிமார்களைநோக்கி "அமைச்சர்களே! நம் குலமாளிகையிலிருக்கும் பண்டார முழுவதையும் பொதி செய்து ஆட்களின்மேல் ஏற்றிக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட, அவர்கள் அவ்வாறே அங்குள்ள பொருள்கள் யாவற்றையும் ஏற்றிக்கொண்டு வந்து வணங்கி நின்றனர். சேரமான் பெருமானாயனார் பாணபத்திரனுக்கு அந்தத் திரவியங்களெல்லாவற்றையும் தனித்தனியே காட்டிப் பின்னர், அப்பாணனை விளித்து, "தேவரீர் இவை யெல்லாவற்றையுமன்றி, அடியேனுடைய நால்வகைப் படைகளையும், அரசுரிமையையும் கைக்கொண்டு அருள்புரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று மிகவும் பணிவுடன் சொல்ல, பாணபத்திரன் சிறிதுநேரம் அவை எல்லாவற்றையும் கண்டு மனமகிழ்ந்து அதிசயித்து நின்றான். நின்றவன், நாயனாரை நோக்கி "சுவாமி! எனக்கு வேண்டுவனவற்றை மாத்திரம் கொள்ளும்படி அடியேனுக்கு சிவாஞ்ஞை. ஆதலால் அரசையும் அரசுறுப்புக்களையும் தேவரீரே கைக்கொண்டருளும்" எனப் புகன்று வணங்கினான். நாயனாரும் சிவாஞ்ஞையை மறுத்தற்கஞ்சிப் பாணன் சொல்லுக்குடன்பட்டார். பாணபத்திரன் தனக்குச் சேரர்பெருமான் கொடுத்த தனங்களெல்லாவற்றையும் ஒரு யானையின்மேல் ஏற்றிக்கொண்டு தன்நகர் நோக்கி நடந்து சென்றான். நாயனார் பத்திரனைப் பிரிதற்காற்றாதாராய் அவனைப் பின்பற்றிக் கண்ணீர் சொரியக் கைகட்டிக்கொண்டு, வழி நடந்துவந்தார். பாணன் புறநகரை யடைந்ததும், நாயனாரிடத்து விடைபெற்றுக்கொண்டுபோய் மதுரையை யடைந்தான்.

(இன்னும் வரும்.)

S. சீதாராமையர்,
Tamil Pandit, National College, High School, Trichy.

பிழை திருத்தம்:—சென்ற சஞ்சிகையில் எம் அஜாக்கிரதையால் நேர்ந்த பின் வரும் பிழைகளைத் திருத்தி வாசித்துக்கொள்ளுமாறு அன்பர்களை வேண்டுகிறோம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
169	26	பட்டுடுத்து	பட்டத்து
170	9	ஏ! பெருமானே!	எம் பெருமானே
171	1	இவ்வாறு இங்ஙனம்	இங்ஙனம்.
173 (4வது செய்யுள்)	2	சுதந்தரவான்	சுதந்தரவாள்

பத்திராதிபர்,

மதிப்புரை.

சியாமளாதண்டகம்:-எமக்கு வடமொழிப்பயிற்சி மிக்கில்லை யாதலின், இந்நூலை, அதிலும் தமிழிலும் வல்ல எம் நண்பர் ஸ்ரீமத் வாசுதேவையரைக்கொண்டு ஆராய்வித்து மதிப்புரை வெளியிட்டுள்ளோம்:

ஸ்ரீ காளிதாஸ மகாகவி, ஸ்ரீசியாமளாதேவியாரின் கருணைப் பெருக்கினைப் போற்றியாங் குரைத்தது, 'சியாமளாதண்டக' வடநூலென்பது அறிஞர் யாவரும் அறிந்தது. இந்நூலின் அருமைப் பெருமைப் பாடுகளைப் நலங்கனிந்த பெரியோர் யாவரும் தெள்ளிதின் உணர்வர். இதிலடங்கிய திவ்யஸ்லோகங்கள் அனைத்தும் அம்பிகையாரின் பிரசாதாமிர்தப் பிரவாஹமே என்பர் பெரியோர். இது வரையில் வடநூலாரே போற்றக் குறித்தாயிருந்த இந்நூலைத் தென் மொழியாரும் சுவைத் தின்புறும் பொருட்டுத் **'தென்மொழிக் காளிதாஸர்'** எனத் தக்கவாறே, இலந்துறை ஆசிரியர்: ஸ்ரீமத் E K கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் தேனினும் இனிமைவாய்ந்த தமிழ் விருத்தப்பாவாலும், அகவற்பாவாலும் மொழி பெயர்த் தியற்றி யுபகரித்துள்ளார்கள். ஒரு பெரு மொழியினின்று ஒரு நூலை மொழிபெயர்த்துதவுதல் அரியசெயல் என்பதை யாவரு மறிவர். மொழிபெயர்ப்புள் முட்டுப்பாடுகள் பலவுமுண்டு. ஆயின், அவ்விடர்ப்பாடுகள் இந்நூலுட் சிறிதும் இன்றி, முதனூலேபோல் சொற்பொருணலங்கள் திகழ்தலைக் கண்ணுறுவோர், இவ்வாசிரியரின் திறனை வியவா திருத்தல் கூடுமோ! இதனைப் படித்துணருவோர் பக்திரஸம் பூரித்துத் ததும்பத் தெய்வத்திருமணம் கமழ்ந்திலகக் காண்பார் என்பதுண்மையே. இவ்வரிய மொழிபெயர்ப்பு நூலால் தமிழன்னையை அணிவித்த ஆசிரியர்க்குத் தமிழுலகு நன்றிபாராட்டுங் கடப்பாடுடைத்தே. இவ்வாசிரியர் இன்னும் இதுபோல் காளிதாஸ மகாகவியின் திருவாக்கினின்றும் தமிழில் தந்து உபகரிப்பர் என எண்ணுகிறேம். இதன் விலை அணு 2. வேண்டுவோர் "E.K. கிருஷ்ணமூர்த்தி ஐயர், இலந்துறை Via, நாச்சியார் கோயில் திருவிடைமருதூர் போஸ்ட்" என்ற விலாசத்துக்கு எழுதவும்.

—பத்திராதிபர்.

பெஞ்சமின் பிராங்க்லின்.
Benjamin Franklin.

அத்தியாயம் 7.

தம்மைப் பண்படுத்திக் கொண்டவிதம்.

தேசுந் திறனறிந்த திட்பமுந் தேர்ந்துணர்ந்து
மாசு மனத்தகத் தில்லாமை—ஆசின்றிக்
கற்றல் கடனறிதல் கற்றறி ரிணத்தராய்
நிற்றல் வரைத்தே நெறி— அறநெறிச்சாரம்

பெஞ்சமின் பிராங்க்லின் தாம் மனத்தாலும், வாக்காலும், செய்கையாலும் எவ்விதத் தவறும் இழைக்கக்கூடாதென்று தமது 27-ஆம் வயதில் பிரதிக்ஞை செய்து கொண்டார். மனிதனுக்கு இயற்கையாலோ, வழக்கத்தாலோ, அல்லது சகவாஸ தோஷத்தாலோ உண்டாகும் துர்க்குணங்கள் அனைத்தும் தம்மை அணுகாதிருக்க ஒரு சூழ்ச்சி செய்தார்: தமதெண்ணம் நிறைவேற விதிகள் பதின்மூன்றை இயன்றவாறு கடைப்பிடித்தொழுக எண்ணினர். அவ்விதிகளாவன:

"1. மிதபோஜனம்:—'மீதூண்விரும்பேல்'; அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

2. சம்பாஷணை:—பொய், கோள், கடுஞ்சொல், வெற்றுரை, வசை முதலியன வாராமல் நாவைக் காத்து உனக்கும் பிறருக்கும் நயந்தரு வார்த்தைகளையே பேசுக.

3. ஒழுங்கு.—'செய்வன திருந்தச்செய்'. உன்னிடமிருக்கும் ஒவ்வொரு பொருளையும் அததற்குரிய இடத்தில், அப்போதைக்கப்போது ஒழுங்காய் வைத்திடுக. உரியகாலங்களில், செய்யவேண்டிய காரியங்களை திருந்தச் செய்க.

4. உறுதி:—இன்னின்ன செய்து தீரவேண்டுமென எண்ணித் துணிந்து, துணிந்தவண்ணமே அவற்றை நிறைவேற்றுக.

5 செட்டு:—அற்பப்பொருளையும் வீணில் செலவிடாது, உனக்கோ பிறர்க்கோ பயன்தரும் நல்வழிகளிலேயே செலவிட்டுப் பொருளைப் போற்றி வாழ்க.

6. சோம்பித்திரியேல்:—வீண் பொழுதுபோக்க ஒண்ணுது. சோம்பலை ஒழித்து எப்பொழுதும் சுறுசுறுப்புடன் செய்யத்தக்க காரியங்களைச் செய்க. பயனிலாத் தொழிலில் பாடுபட வொண்ணுது.

7. கரவிலா வுண்மை:—பிறருக்குத் தீங்கு செய்யக்கூடிய நயவஞ்சகத்திற் கிடந்தாகதே, நேர்மையாகவும் பாரபட்சமின்றியும் எதையும் கருது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசேல்.

8. நீதி:—'கெடுப்பதொழி'. 'செய்வினை செய்'. இல்லையேல் உனக்கும் பிறருக்கும் தீமையே உண்டாகும்.

9, சினந்தணிதல்:—'கோபத்திற் கிடங்கொடேல்'. பிறர் உனக்குச் செய்யும் தீங்கை இயன்றவரை மற. 'நன்றல்ல தன்றே மறப்பது நன்று'.

10. சுத்தமுடைமை.—உடல், உணவு, உறைவிடம், இவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்க.

11. மனஅமைதி:—அற்ப காரியங்களுக்காக அதிகச் சஞ்சலப்படவேண்டா. விலக்க முடியாதவைகளை நினைந்து வீண் கவலையும் வேண்டா.

12. மாசிலா இல்லற வாழ்க்கை:—கருமஞ் சிந்தையாமலும் தருமம் தாழ்வுபடாமலும் உத்தம மனைவியுடன் யாவரும் போற்ற வாழ்க.

13. அடக்கம்:—யாவும் அறிந்தும் எதும் அறியாதது போல் சர்வமின்றியும் பணிவுடனும் இருத்தல். செயற்கரிய செய்த பெரியோர்களான ஏசுநாதரையும், 'சாக்கிரட்டீஸ்' என்னும் தத்துவ சாஸ்திரியையும் முன்மாதிரியாகக் கொண்டு அவர்கள் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்திடுக" என்பனவே.

இப்பதின்மூன்று விதிகளையும் கடைப்பிடித்தொழுகினால், தாம் மதிப்பிற்குரிய மனிதராகலாமென எண்ணினர். இவைகள் யாவற்றையும், ஏககாலத்தில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருதல் அவருக்குச் சிரமமாய் இருந்தது. அதனால் அவர் முதல்வாரத்தில் முதற் கொள்கையையும், இரண்டாவது வாரத்தில் முதலிரண்டு கொள்கைகளையும், மூன்றும் வாரத்தில் முதல் மூன்று கொள்கைகளையும், இவ்வாறே பதின்மூன்று வாரங்களில் பதின்மூன்று கொள்கைகளையும் இயன்றவாறு தமக்குத் திருப்திகரமாக அனுசரித்து வாலானர். இவ்வாறு, அவர் வருடமுழுவதும், விதித்தவற்றைச் செய்து விலக்கவேண்டியவற்றை விலக்கி இந் நற்கொள்கைகளைக் கூடியமட்டும் தமது தினசரி வழக்கமாக ஆக்கிக்கொண்டே விட்டார்.

இதன்றியும், அவர் 'வைகறையாமம் துயிலெழுந்து' தாம் செய்யவேண்டிய அறச் செயல்களையும் பொருளீட்டும் வகைகளையும்

பற்றிச் சிந்திப்பார். பின் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு உரியகாலத்தில் உணவருந்தி, எட்டுமணிக்கு வேலைசெய்யப் புகுவர். அச்சுக்கூடம் பத்திரிகை முதலியன சம்பந்தமாக உள்ள வேலைகளையும் குறைவற முறைபெற நிறைவேற்றி, கணக்குவழக்குகளை முடித்துக் கற்கவேண்டியவைகளைச் சிறிது நேரம் கற்று, ஒரு மணிக்குப் பகலுணவு அருந்தச்செல்வர். பின், முற் கூறியவாறே இரண்டிலிருந்து ஐந்துமணிவரை உழைப்பார். ஆறுமணியானதும், சம்பாஷணை, சங்கீதம், தேகாப்பியாசம், பொருள்களைஒழுங்குபட வைத்தல் முதலியவற்றில் தம் காலத்தைச்செலவிடுவர். இவைதானதும், தாம் செய்யவேண்டுமெனக் காலையிற் குறித்திருந்த காரியங்களில் எவ்வளவு நிறைவேறின எனச் சிந்திப்பார். சரியாகப் பத்தடித்ததும் படுக்கைக்குச் செல்வர்.

தாம் செய்த காரியங்களைப் பழக்க வழக்கங்களாக்கிக் கொள்ள அவர் பட்ட சிரமம் கொஞ்சமல்ல.

> 'எண்ணிய எண்ணியாங்(கு) எய்துப, எண்ணியோர்
> திண்ணியராகப் பெறின்'
> 'அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
> பெருமை முயற்சி தரும்'

என்பன பொய்யா மொழியார் வாக்கன்றோ?

இவர் தமது தீர்மானங்களை நிறைவேற்றிக் காரிய சித்திபெற்று அடைந்தபயன்களைக் குறித்துத் தமது எண்பதாம் வயதில் வெளியிட்டுள்ள பின்வரும் குறிப்பானது, முன்னுக்குவர விரும்பும் மாணவர்களுக்கும் பிறர்க்கும் மிக்க நன்மை விளைவிக்கும்:

"நான் எண்பது வயதுவரை வியாதியின்றி சுக ஜீவியாயும், திடகாத்திர முள்ளோனுயும் இருத்தற்குக் காரணம், மிதூண் ஒழித்தமையே. என் செல்வநிலைக்குக் காரணம் செட்டே. என் கல்விக்கும், கற்றோர் மதிக்கும் என் கௌரவத்திற்கும், என்னால் மற்றோர் அடைந்த நன்மைக்கும் காரணம் என் உலையாமுயற்சியே. என்னுடைய தேசத்தார் என்னிடம் பூரண நம்பிக்கை வைத்து என்னை மதித்ததற்கும் எனக்குத் தருந்த பெரும் கௌரவப் பதவிகளை அவர்கள் அளித்ததற்கும் காரணம் என்னுடைய கபடமில்லா உள்ளமும் நேர்மையும் வாய்மையுமே. யாவரும் என்போல் நடந்து நன்மையடைய வேண்டுமென்பதே எனது கோரிக்கையும் விருப்பமும்"

அத்தியாயம் 8.

அவர்செய்த பல நன்மைகள்.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்—திருவள்ளுவர்.

இவர் தாம் பிறந்த தேசமாகிய ஐக்கியமாகாணத்திற்கு எண்ணிறந்த நன்மைகள் செய்ததாக முதல் அத்தியாயத்தில் கூறினோம். அவைகள் இன்னவென ஒருவாறு இங்கு கூறுவாம்.

1. புத்தகசாலை:—அக்காலத்தில் பிலடல்பியாவில் புத்தகசாலைகள் கிடையா, அங்குள்ள பிரபல வியாபாரிகள்கூட, பள்ளியிற் பயிலும் மாணவர்களுக்கான புத்தகங்களை வைத்து வியாபாரம் செய்து வந்தார்களே ஒழிய, அறிவு வளர்ச்சிக்கான இலக்கிய இலக்கண நூல்களை வைத்து வியாபாரம் செய்யவில்லை. முக்கிய புத்தகம் வேண்டுவோர் இங்கிலாந்துக்கே எழுதிப் பெற்று வந்தனர்.

புத்தகப் பிரியர்களை ஒருங்குசேர்த்து அவர்களிடமிருந்து தலைக்கு இரண்டு பவுன் பிரவேசக் கட்டணமாகவும், பத்து ஷில்லிங்கு வருடச் சந்தாவாகவும் வசூலித்து, ஒரு புத்தகசாலை ஏற்படுத்தப் பெஞ்சமின் நினைத்தார். அக்காலத்தில் புத்தகப்பிரியர் வெகுசிலரே பிலடல்பியாவில் இருந்தமையாலும், கல்விப் பிரியரில் பெரும்பாலோர் சந்தாச்செலுத்தச் சக்தியற்ற ஏழைகளாய் இருந்ததாலும், பெஞ்சமின், ஆயிரம்பாடு அரும்பாடு பட்டும், ஐம்பதின்மரையே அங்கத்தினராகச் சேர்க்க முடிந்தது. அவர்கள் தந்த சிறு தொகையைக் கொண்டே ஒரு சிறு புத்தகசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இப் புத்தகசாலைக்கு இங்கிலாந்திலிருந்து புத்தகங்கள் வரவழைக்கப்பட்டன. வாரமொருமுறை புத்தகங்கள் அங்கத்தினர்க்கு வழங்கப்பட்டன. புத்தகங்களைப் போக்கடித்தோர் அவற்றின் இருமடங்கு கிரயம் கொடுக்கவேண்டுமென விதி ஏற்படுத்தப்பட்டது. இப்புத்தகசாலை வெகு சீக்கிரம் சிறப்புற்றோங்கிப் பயனளித்தது. இதின் உபயோகத்தைக்கண்ட மற்ற மாகாணங்களும் இம்மாகாணத்தைப் பின்பற்றலாயின.

2. பெருங்கல்விக்கழகம்:—'கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்' என்பதின் உண்மை

யறிந்த பெஞ்சமின் மாணவர் கல்வி பயிலக் 'கலா நிலயம்' ஒன்று அமைப்பதின் அவசியத்தையும் அது அமைத்தற்கான வழிகளையும் பற்றி எழுதி, துண்டுப் பத்திரிகைகள் அடித்து ஊர் முழுவதும் இலவசமாய் வழங்கினர். பின் அக் கலாநிலயத்திற்கென்று நிதி வசூலிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பெஞ்சமின் நன்முயற்சியால் 5,000 பவுன்கள் வசூலிக்கப்பட்டன, கிறிஸ்து மதப்பிரிவினர் பலரும் ஒத்த மனத்தாராய் முன் வந்து தங்களாலான உதவி புரிந்தனர். இதன் நிர்வாகத்தின் பொருட்டு ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் பெஞ்சமினிடமே கலா நிலய நிர்மாணம், நிவாசம் முதலியன சம்பந்தமான பொறுப்புக்கள் ஒப்புவிக்கப்பட்டன. அவரும் மிகுந்த சிரமப்பட்டு இவ்வேலையை இனிது நிறைவேற்றினர். பெஞ்சமின் தம் நன் முயற்சியால் கட்டப்பெற்ற கழகத்தில் பயின்ற மாணவர்கள், மகா நிபுணர்களாய், பொதுஜன ஊழியம் செய்து, தேசத்திற்கே ஆபரணங்களாய் விளங்குவதைக்கண்டு களிக்கும் பாக்கியமும் பெற்றார்.

3. வைத்தியசாலை அமைத்தல்:—நோயுற்ற ஏழை ஜனங்களுக்கு மருந்துகொடுத்துதவல் நாகரிகமடைந்த ஒவ்வொரு நாடும் செய்யவேண்டிய முக்கிய வேலையன்றோ! இவ்வேலையை நடத்த இவருடையநண்பர், பாண்ட் (Bond) என்பவர், எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. பெஞ்சமினின் அபிப்பிராயம் பெறாத எந்தவிஷயத்திலும், ஜனங்களுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. இஃதறிந்த அந்நண்பர், தம் கருத்தைப் பெஞ்சமினிடம் தெரிவிக்க, அவர் அதன் உபயோகத்தை அநுமதித்துத் தம்மாலியன்ற பொருளுதவி செய்ததுமன்றித் தம் நண்பர்களையும் இயன்றஉதவி புரியத் தூண்டினர். தம் பத்திரிகையிலும் வைத்திய சாலையின் அவசியத்தைப்பற்றி அடிக்கடி எழுதி ஜனங்களுக்கு அதன் உபயோகத்தை விளக்கி வந்தார். பின்னும் சட்ட மாகாணசபையில், அரசாங்கத்தார் வைத்தியசாலை அமைக்கப் பொருளுதவி செய்யவேண்டுமென அவர் ஓர் மசோதாவை நிறைவேற்றற்காவன செய்தார். இதன் பலனாக, பிலடல்பியாவில் ஒரு வைத்தியசாலை நிறுவப்பட்டது. ஏழைப் பிணியாளிகளுக்கு மருந்தும் உணவும் இலவசமாய் வழங்கப்பட்டன.

4. ரஸ்தாப் போடல் :— அக்காலத்தில் பிலடல்பியாவில், மிகவும் ஒழுங்கான அழகிய வீதிகள் இருந்தபோதிலும், சாலைக்கற்கள் பரப்பிய ரஸ்தாக்கள் கிடையா. மாரிகாலத்தில் ரஸ்தாக்கள்

சேறும் சகதியும் நிறைந்து, மனிதர் நடமாடுவதற்குத் தகுதியற்றன வாய் இருந்தன. பெஞ்சமின் ரஸ்தாவில் கற்கள் பாப்ப வேண்டியது அவசியமென்று எழுதியதோடு, தம் நண்பர் பலரிடம் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். இதன் பயனாக மனிதர் நடமாடுவதற்கான சாலை பாப்பிய ஒற்றையடிப்பாதை ஒன்று, மிகுந்த ஜன நடமாட்ட முள்ள ஒரு வீதியில் பரீக்ஷார்த்தமாக அமைக்கப்பட்டது. இதனால் அடைந்த நன்மையை உணர்ந்து ஜனங்கள் மகிழ்ந்தனர்.

ஆயினும் வீதிகூட்டுவோரின்றித் தெரு அசுத்தமாயிருந்ததால் அதில் நடமாடும் ஜனங்களால் இந்த ஒற்றை அடிப்பாதையிலும், வெகுவிரைவில் சகதி நிரம்பியது. இச்சமயம் ஒருவன், தனக்கு வீட்டிற்கு மாதம் ஒன்றுக்கு ஆறு அணு வீதம் கொடுத்தால், அப் பாதையை, வாரமிருமுறை கூட்டிச் சுத்தம் செய்வதாக ஒப்புக்கொண் டான். பெஞ்சமினுக்கு, இம்மனிதன் சொல்வதை அங்கீகரித்தால் நன்மை ஏற்படுமென்றே பட்டது.

கடைக்கருகில் இருக்கும் அவ் வொற்றை அடிப்பாதை சுத்தமா யிருந்தால் சாமான் வாங்க வருவோர் சந்தோஷமாய் வருவதற்கியலு மென்றும், காற்றுக்காலங்களில் சமான்களின்மீது புழுதி முதலிய அசுத்தங்கள் நிரம்பா என்றும், காலில் ஒட்டின சகதி வீட்டினுட்புக இடமிராதென்றும், பெஞ்சமின், தம் பத்திரிகை வாயிலாக ஜனங் களுக்கு எடுத்துக்காட்டினர். இவ்வுண்மையை உணர்ந்த ஒவ்வொரு வீட்டுக்காரனும், அவன் கேட்ட தொகையைக் கொடுத்து, வீட்டின் முன்னிருக்கும் அப்பாதையைச் சுத்தமாய்வைத்துக்கொள்ள இசைந் தான். பின் பெஞ்சமின் இவ்விஷயத்தை அரசாங்கத்தாரே கவனி த்து முக்கிய வீதிகளில், சாலைக்கற்கள் பாப்பி வீதிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு மசோதாவைச் சட்ட மகா சபையில் கொண்டுவந்து நிறைவேற்றினர். பின் அடுத்தடுத்து நல்ல ரஸ்தாக்கள் பலவீதிகளிலும் போடப்பட்டன.

5. தெருக்களில் விளக்குப்போடல் :— இருட்டுக் காலங் களில், முனிசிபல் விளக்குகள் போட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். பெஞ்சமின் காலத்தில் இவை கிடையா. அதனால் இருட்டில் ஜனங்கள் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. இக்கஷ்டத்தை நிவிர்த்தித் தவர் இவரே. ஒவ்வொரு வீதியிலும் விளக்குகள் போடப்பட்டன.

6. 'மின்வாங்கி':— இதுவரை நாம் சொல்லி வந்த நன்மைகள் அவர் பிலடெல்பியாவுக்கும், அதன் மூலம் ஐக்கியமாகாணத்துக்கும், செய்த நன்மைகளே. ஆனால் உலக முழுமைக்குமே பெஞ்சமின் செய்த, அதிமிக்க நன்மை ஒன்று உண்டு. அந் நன்மைபால் அவரது ரசாயன சாஸ்திர நிபுணத்துவம் நன்கு விளங்குகிறது:

இவர் காலத்திற்கு முன்பே மின்னலும், மின்சாரமும் ஒன்றுதான் என்று எண்ணப்பட்டு வந்தது. மேகங்கள் அடர்ந்து, மழை நீராக மாறும்பொழுது, விறகில் தீயைப் போலும், எள்ளில் எண்ணெயைப்போலும் மறைந்திருக்கும் மின்னலின் சாரம் திரண்டு மின்னலாகிறது. ஆயினும் இவ்வுண்மை நிதர்சனமாக நிரூபித்துக் காட்டப்படாமலிருந்தது. பெஞ்சமினே இவ்வுண்மையை வெளிப்படுத்த முற்பட்டவர். இவர் தமது 'காற்றாடி' மூலம், உலகத்தாருக்கு அவ்வுண்மையை விளக்கினர்:

1752௵, ஒருநாள், காற்று மழை இடியுடன் கூடிய பெரும் புயலில் பெஞ்சமின் தம் காற்றாடியுடன் வயற்புறம் சென்றார். இக்காற்றாடி பட்டுத்துணியா லாகியது. இக்காற்றாடியின் குச்சியின் மேல் நுனியில், கூர்மையான ஒரு இருப்புச்சலாகை செருகப்பட்டிருந்தது. மின்சாரத்தைத் தன்னுள் செலுத்தும் சுபாவமுள்ள சணலால் செய்த கயிற்றால் காற்றாடிப் பட்டம் தொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் காற்றாடியைப் பற்றியிருந்த பாகம், மின்சாரத்தைத் தன்னில் உட்புகவிடாத பட்டுக்கயிற்றுடன் சேர்ந்ததாக இருந்தது. இவ்விரு கயிறுகளும் சேர்க்கப்பட்டிருந்த இடத்தில், இரும்புத் திறவுகோல் ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது.

மேற்சொன்ன வேலைப்பாடமைந்த காற்றாடியானது, காற்றில் உயரப்பறந்தது. அச்சமயம், காற்றாடியின் மேல் நுனியில் இருந்த இரும்புச்சலாகை வழியாக மேகத்திருந்த மின்சாரம் பிரவேசித்து, சணற்கயிறுமூலம் திறவுகோல்வரை சென்று, பட்டுக்கயிற்றின் வழிச் செல்லாது நின்றது. இச்சமயம் பெஞ்சமின் திறவு கோலைத்தொடவும் மின்சாரம் தேகத்தில் ஊடுருவிப்பாய்வதால் உண்டாகும் உணர்ச்சி இவருக்கு உண்டாயிற்று. அதனால் மின்னலும், மின்சாரமும் ஒன்றே என்ற உண்மையைக்கண்டு அவர் உலகத்தாருக்கு அறிவித்தார்.

இவ்வுண்மையை அவர் அறிந்தது உலகத்தாருக்கு அதிக நன்மையைப் பயந்தது. இவ்வுலகத்தில் இடியால் சேதமுறும் கட்டிடங்கள் அநேகமன்றோ!—இம்மின்னலின் வீழ்ச்சியே இடி யெனப் படுவது. இடி எந்தக்கட்டிடத்தின் மேலாவது விழுந்தவுடன், அக்கட்டிடம் சேதமுறுவதற்குக் காரணம், விழுந்த மின்சாரத்திற்கு உரிய போக்கில்லாமல் விழுந்த இடத்திலேயே, தங்கிவிட நேர்வதாலேயாம். இதற்கு, நுனியில் கூராக்கிய ஒரு பருமனான செப்புக் கம்பியை, உயர்ந்த கட்டிடங்களின் உச்சியில் நாட்டி, நாட்டப்பட்ட கம்பியை, செம்பு அல்லது இரும்பாலே செய்த மற்றொரு கம்பியுடன் பொருத்திக் கீழே பூமிக்குள் தண்ணீரை எட்டும்படி செய்து விட்டால், மேகத்தினின்று வரும் மின்சாரம் வேறெதன் மேலும் படாமல் நேராய் அந்தச் செப்புக்கம்பியில் பாய்ந்ததும், அதன்மூலம், பொருத்தப்பட்ட கம்பிவழியாய்ப் பூமிக்குள் தண்ணீரில் பிரவேசித்து விடும். அதனால் கட்டிடத்திற்கு ஒருவித சேதமும் வராது. இக்கருவியே 'மின்வாங்கி' யெனப்படும். இக்கருவியைக் கண்டுபிடித்தவர் பெஞ்சமினே.

இதனால் ஆயிரக்கணக்கான உயிர்களும், வீடுகளும், ஆலயங்களும் மின்னலுக் கிரையாகாமல் சாக்கப்பட்டு வருகின்றன.

சாணக்ய சாகஸம் என்னும்

சந்திரகுப்த சரிதம்.

முதற்பாகம்.

"நூலின் நடை மிகவும் பாராட்டற்பாலது. குற்றமற்று இலகுவாய் அமைந்துளது. கதை தேன்போல் தித்திக்குமாயினும் தெவிட்டாத தெள்ளமுது போன்றது. முற்றும் படித்து முடித்தாலொழியப் புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது. பெண்மக்களும் சிறுவர்களும் படிப்பதற்க்கு ஏலாவாறு சில நாவல்களில் காணப்படும் பதப் பிரயோகங்களும் வாக்கியங்களும் மருந்திற்கும் இந்நாவலில் இல்லை'' விலை ரு 1-4-0.

ஷை இரண்டாம் பாகம்.

"முதற்பாகத்தினும் இனிமையும் விரிவும் மிக்கது. படிப்போர் மனத்தைக் கவரத்தக்க பற்பல விஷயங்கள் கொண்டு பயனளிப்பது. சந்திரகலாமிர்தத்தையும், மழைத் துளியையும் விரும்பி எதிர்பார்த்தவண்ணம் நிற்கும் சகோர சாதகப் புட்களைப்போன்று இது முதற்பாகம் படித்தோரால் பிரதி நிமிஷமும் விரும்பி எதிர்பார்க்கப் பட்டிருப்பது. சொற்பப் பிரதிகளே வெளியிடப்பட்டுள்ளன." விலை ரு 1—8—0.

இரண்டு பாகங்களும் ரு **2—0—0** தான்.

ம. கோபாலகிருஷ்ணையர்,
நச்சினார்க்கினியன் நிலயம், திரிசிரபுரம்.

மாண்டவன் மீண்ட மாயம்.

இரண்டாவது அத்தியாயம்.

துக்க ஸமாசாரம்
Unpleasant News.

சிதம்பரம் பழைய காலத்து வக்கீலாயினும், நாகரிகத்துக்குத் தகுந்தபடி தம் நடை யுடை பாவனைகளை மாற்றக் கூடியவர். காலத்துக்குத் தக்கபடி கோலம்போடுபவர். எதிரியின் முகத்தைச் சற்றுக் கவனித்து அவன் அகத்திலுள்ளவைகளை அறியக்கூடியவர். எது செய்தாலும் யோசித்துச் செய்வாரேயொழிய அவசரப்பட்டொன்றும் செய்யார். பத்து வருஷங்களுக்குப் பின் நடப்பவைகளுக்கு, இப்பொழுதே எற்பாடு செய்துகொள்வார். இவருக்குச் சுமார் 50வயது இருக்கும். தன்பெற்றோர் இறந்தபிறகு, இவர் ஸம்ரக்ஷணையிலிருந்து தான் ராமஸ்வாமி வளர்ந்து வந்தான். இவனைச் சொந்தப் பிள்ளையினும் அருமையாகச் சிதம்பரமும் அவர் ஸம்ஸாரமும் வளர்த்து வந்தனர். நிற்க.

அன்று மாலை 3மணிக்கு, ராமஸ்வாமி, சிதம்பரத்தின் வீடு சென்று, அவரைக்கண்டு, ''மாமா! நமஸ்காரம்'' என்றான். உடனே, சிதம்பரம் "வா, அப்பா ராமஸ்வாமி! எங்கே இறங்கினாய், நேரே இங்கே வராமல்!'' என்று சொல்லிக்கொண்டே, ராமஸ்வாமியை ஒரு நாற்காலியில் உட்காரச் செய்து, தாமும் எதிரில் மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்தார். என்ன விதமாகச் சம்பாஷணை ஆரம்பிப்பதென்று சிதம்பரம் ஆலோசித்துக்கொண்டிருக்கையில், ராமஸ்வாமி அவருக்குச் சிரமம் கொடாமல் தானே ஆரம்பித்தான்.

ராம:—இதோ இருக்கிறது பாலாம்பாள் கடிதம். உங்கள் கடிதப்படி அவளைப் பார்க்குமுன்னமே தங்களிடம் வந்தேன்.''

சிதம்:—(கடிதத்தை வாங்கி அலக்ஷியமாய்ப் பார்த்துக்கொண்டு), "ஹ்ம்! அவள் எழுதுவாளென்றே நினைத்தேன்—''

ராம:—"தங்களுக்கு அவளைத் தெரியுமோ?''

சிதம்:—"தெரியும்'', (சற்று யோசித்து)—"அவளைச் சென்ற இருபது வருஷ காலமாகப் பார்க்கவில்லை.''

ராம:—இருபது வருஷம்! அதாவது, நான் தங்கள் வீட்டுக்கு வந்தகாலம்''.

சிதம்பரம் சற்றுத் திடுக்கிட்டு, 'ஒருவேளை ராமஸ்வாமி வேண்டு மென்று இவ்வாறு சொன்னானோ' என்று அவன் முகத்தைப்பார்க்க, அவன் முகத்தில் யாதொரு விகாரமும் இல்லாததால், மனந்தேறிக் கடிதத்தை மறுமுறையும் கவனமாய் வாசித்துவிட்டு, ராமஸ்வாமி யைப் பார்த்து, "என்ன யோசிக்கிறாய்!" என்றார்.

ராம:–"என்ன யோசிப்பது!—'இந்தப் பாலாம்பாள் யார்? எதற்காக என்னைப் பார்க்க விரும்புகிறாள்!' என்று தான்."

சிதம்:—"அவள் புருஷனை இழந்தவள். கொஞ்சம் 'ஐவேஜு' படைத்தவள்—'

ராம:—" என் குடும்பத்தைப்பற்றி அவளுக்கு ஏதாவது தெரியுமா?"

சிதம்:—" அதை ஏன் கேட்கிறாய்!"

ராம:–"நானோ அவளை முன் பின் அறியாதவன். என் சொந்த சமாசாரம் அவளிடம் என்ன இருக்கலாம்! அவளைத் தாங்கள் இருபது வருஷமாகப் பார்க்கவில்லை என்கிறீர்கள். அதாவது, என் பெற்றோர் இறந்தகாலம் முதல்."

சிதம்:—(திடீரென்று), " அவளை நீ பார்க்கவே வேண்டாம்–சொல்லுகிறேன் கேள். காரணமின்றிச் சொல்ல மாட்டேன்."

ராம:—" ஆமாம்—சரிதான்—. என்ன இருந்தாலும்"

சிதம்:—"நீ சிறுபிள்ளை இல்லை. மனிதர் பிழைப்பு மிகவும் கஷ்டமானது—உனக்குத் தெரியாததில்லை—."

ராம:—"வாஸ்தவந்தான்—ஆனால் எனக்கு இதுவரை அப்படி யொன்றும் சம்பவிக்கவில்லை—"

சிதம்:—" சரி! நீயும் மனிதனே. கஷ்டப்படக் காலம் வந்து விட்டதுபோலிருக்கிறது. ஈசன் செயலை யாரே தடுப்பார்?

ராம:—ஓஹோ! எனக்குச் சொற்ப வரும்படி: வருஷத்திற்கு ரூபாய் 1000. அதற்கும் ஏதாவது ஆபத்து—"

சிதம்:—(திடுக்கிட்டு) " இல்லை. உனக்குப் பொருள் நஷ்டம் ஏற்படாது—உன் பெற்றோர் கஷ்டத்தை நீ ஏன் இப் பொழுது நினைத்துச் சங்கடப்படவேண்டும்? நடந்தது நடந்து விட்டது."

ராம:—" நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே. இந்தப் பாலாம்பாளுக்கும் என் பெற்றோர்களுக்கும் என்ன சம் பந்தம்? என்னைப் பார்த்து அவளுக்கு ஆகவேண்டியதென்ன?"

சிதம்:—“ கேள். உன் பெற்றோர்கள்—”

ராம:—“ அவர்கள் தான் இறந்து போனார்களே!”

சிதம்:—“உண்மையே. அவர்கள் இறந்துவிட்டார்கள்.—“ராமஸ்வாமி! நீ ஐந்துவயதில் என் வீட்டுக்கு வந்தது முதல் சொந்தப் பிள்ளையினும் அதிகமாக பாராட்டி உன்னைவளர்த்து வந்தேன். உன்னைஎவ்விதத்திலும் நல்லஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டும் என்பதுதான் என் கருத்து. அதுதவிரவும், இந்தத் ‘தஸ்தாவேஜு’களில் கண்ட விஷயங்கள் உனக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென்பதும் என் எண்ணம்—ஆனால்—”

ராமஸ்வாமி சற்று யோசித்து யாதொரு பதிலும் சொல்லத் தோன்றாதவனாய்ப்பிரமித்துப் பிறகு, “ஆனால்’ என்றீர்களே, என்ன விஷயம்?” என்று கேட்டான்.

சிதம்:—“ ‘போனது போகட்டும்; பழைய கொலைகளையும் அபவாதங்களையும் இப்பொழுது ஏன் கிளப்பவேண்டும்’ என்றுதான் எண்ணினேன்”

ராம:—(ஆச்சரியத்துடன்) “ கொலை!”

சிதம்:—(வருத்தத்துடன்) “ ஆமாம்—கொலைதான்—உன் பெற்றோர் கதியை நீ அறியவேண்டிய காலம் நேர்ந்தது போலும். இருபது வருஷமாயிற்று. இப்பொழுது இந்தப் பாலாம்பாள் அதை உனக்கு வெளியிட விரும்புகிறாள். எதற்காகவோ தெரியவில்லை. அவளை வெளியிட வேண்டாமென்று இரண்டு மாதத்துக்கு முன் எவ்வளவோ கெஞ்சினேன்.—என்ன செய்கிறது! ஒரே பிடிவாதமாய் இருக்கிறாள்போலும்.—நாமென்ன செய்யலாம்!—வருவன வந்தேதீரும்.”

ராம:—“ அதனாலென்ன!”

சிதம்:—“ அவளால் தான் உன் பெற்றோர்களுக்கு இந்தக் கதி வந்தது”

ராம:—“ என்ன? கதியா? என்னகதி!”

சிதம்:—“ உன் தகப்பனார் கொலையுண்டு இறந்தமை.”

ராம:—“ ஹா! கொலை!”

சிதம்:—“ ஆமாம். அதுதான் 1885-ஆம் வருஷம் நடந்த மங்களபுரம் கொலைக் கேஸ்—”

ராமஸ்வாமி யாதொன்றும் சொல்லத் தோன்றாமல் முகம் கறுக்க, முகத்தில் கைவைத்து, நாற்காலியில் அப்படியே சாய்ந்தான்.

சிதம்:—“ அப்பா! இந்தக் கொடிய விஷயத்தை உனக்குத் தெரியாமல் இதுவரை வைத்திருந்தேன். உன் வாழ்நாளை உன் தகப்பனார் கொலை ஞாபகத்தால் ஏன் வீணாக்க வேண்டும் என்பது தான் என் கருத்து. இப்பொழுது இந்தப் பாலாம்பாள் வந்து சேர்ந்தாள் கெடுதிக்கு. நானே சொல்லி விடுகிறேன். இந்தக்கட்டைக் கொண்டுபோய் நன்றாய்ப் படித்துப்பார். அதில் உன் தாயார் விடுதலையான விஷயமும் தெரியும்.

ராம:—(மறுபடி திடுக்கிட்டு) “ என் தயார்!—விடுதலை— ”

சிதம்:—“ ஆமப்பா! உன் தகப்பனார் கொலையில் உன் தாயார் சம்பந்தப்பட்டதாகக் கேஸ். 'ஸெஷன்ஸ்' வரை விசாரணை நடந்து விடுதலையாயிற்று.”

ராம:—“ ஈசுவரா! அவள் தான் இறந்துபோய் விட்டாளே!”

சிதம்:—“ இனி என்னை ஒன்றும் கேட்காதே. இதோ இந்தக் கட்டைப் பார்த்துக்கொள்.”

இவ்வாறு கூறி ஒரு பழைய கட்டைக் கொடுத்தார் சிதம்பரம். அதில் “ மங்களபுரம் கொலைக்கேஸ் **1885** ” என்று மேலே எழுதியிருந்தது. அதை ராமஸ்வாமி வாங்கிக்கொண்டு, மேலே ஒன்றும் கேட்கத் தோன்றாமல், தியங்கி நின்றான்.

சிதம்:—“நீ யாவும் கட்டைப்பார்த்து அறிவதே நலம். அதைப் பார்த்த பிறகு ஏதாவது சந்தேகம் இருந்தால் என்னை வந்து கேள்.”

ராம-—“ ஒரு விஷயம்: என் தகப்பனாரைக்கொன்றது யார்?”

சிதம்:—“ அது எனக்குத் தெரியாது. உன் தாயார்மேல் சந்தேகம். அவள் விடுதலையானாள். உன் தகப்பனாருடைய விரோதி ஒருவன் உண்டு. அவன் மேலும்—”

ராம:—“ அவனுக்கும் விடுதலை? ”

சிதம்:—“ அவனைக் காணவே இல்லை. அவன் போன இடமே தெரியவில்லை. இனி என்னை ஒன்றும் கேட்காதே. கட்டைக் கையில் கொடுத்து விட்டேன். படித்துப் பார்த்துக்கொள்.”

பிறகு ராமஸ்வாமி விடை பெற்று வெளியே சென்றான். சிதம்பரம் “ ஒரு வேளை, இந்தப் பாலாம்பாளுக்கு உண்மை தெரிந்திருக்குமோ? சரி, சரி. இருக்கலாம். அவளுக்குத் தெரியும் போலத்தான் தோன்றுகிறது.” என்று ஏதேதோ யோசிக்கலானார்.

மூன்றாவது அத்தியாயம்.

பூர்வ கதை.
Old Tale.

துக்க சமாசாரம் கேட்ட ராமஸ்வாமி, சித்திரப் பாவை போல் பிரக்ஞையற்றுச் சென்று, இரவில் ஒரு சாப்பாட்டு விடுதியில் உணவருந்தி, அவ்விடத்திலேயே ஓர் அறையில் ஏகாந்தமாய் இராத் தங்கலானான். கவலை மிகுதியால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அதன்பின் அவன் படுக்கையறை சேர்ந்ததும், விளக்கேற்றி வைத்துக்கொண்டு, சிதம்பரம் கொடுத்த கட்டைப் படிக்க ஆரம்பித்தான்.

அந்தக்கட்டில் அடங்கிய விஷயங்களினின்று, அவன், அநியாயமாய்த் தன் தகப்பனார் கொலையுண்டார் என்றும், அதில் தன் தாயார் சட்டப்படி விடுபட்டவளாயினும், உண்மையில் கொலையில் சம்பந்தமுள்ளவளென்றும் தீர்மானித்துக்கொண்டான். அவன்படித்துணர்ந்த விஷய சுருக்கம்:

“மங்களபுரத்தில் வைகையாற்றின் கரையிலுள்ள ஓர் தோட்டத்தின் நடுவிலுள்ள “பத்ம விலாசம்” என்ற ஒரு சிறு பங்களாவில், சோழ என்ற ஒருவர் ஜானகி என்ற தன் மனைவியோடு வாசம் செய்து வந்தார். 1885-ஆம் வருஷத்தில் இவர்களுக்கு ராமஸ்வாமி என்ற 5-வயதுப் புதல்வனும், சங்கரன் என்ற வேலைக்காரனும், அவன் தங்கை சீதை என்ற வேலைக்காரியும் இருந்தார்கள். இச் சிறுகுடும்ப எஜமானனும் எஜமானியும் அவ்வளவு நேசமாக இருக்கவில்லை. பிள்ளை பிறந்துங்கூட அவர்களுக்குள்ள பரஸ்பர வெறுப்பு மாறவில்லை. இவ்வாறிருக்கையில் தர்மராஜு என்ற ஒருவன் அவ்வீட்டுக்கு அடிக்கடி வர, அவன் வரவை ஜானகி அம்மாள் ஆனந்தித்து ஆதரிப்பதாக ஏற்பட்டுவிட்டது. இவ்விஷயத்தைக் கண்ட சோழ, தன் மனைவிமேல் சந்தேகம் கொண்டு, பல தடவைகளில் அவளைக் கண்டித்துவந்தார். ஆனால் அவள் அடங்கவில்லை. மானத்திற்கஞ்சி அவர் தம் குறைகளை வெளிவிடாமல் இருந்தும், அவை ஊராருக்குத் தெரியாமல் இருக்கவில்லை. கடைசியாக, ஒருநாள், அதாவது கொலை நடந்த மாலை,—இரவுக்கு முன்—ஜானகி அம்மாள் தர்மராஜுவோடு சுமார் 5மைல் தூரத்தில் நடந்த ஓர் உத்ஸவத்துக்குப் போகவேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்

டிருந்தாள். இதைக்கண்ட சோமு கோபாவேசத்துடன் தம் மனைவியைப் பலவாறு பேசி, தர்மராஜுவின் நேசத்தை ஒழித்தாலொழிய அவள் முகத்தில் தாம் விழிப்பதில்லை என்றும், தர்மராஜுவைப் பலவாறு வர்ணித்தும் வெளியே சென்றார்.

"ஜானகி தர்மராஜாவுடன் அன்றிரவு உத்ஸவம் பார்க்கப்போய் சௌக்கியமாய் இரவு 3-மணிக்குத் திரும்பியும் வந்துவிட்டாள். மறுநாட்காலை ஜானகியம்மாள் வியாதியால் படுத்த படுக்கையில் வருந்தினாள். தர்மராஜுவும் காணப்படவில்லை.

"சோமுவும் 5 நாள்வரை காணப்படவில்லை. 5ஆவது நாள், ஒரு பிரேதம், மங்களபுரத்துக்குக் கிழக்கே 4-மைல் தூரத்தில் வைகைக் கரை ஓரமாய் அழுகி, விகாரமும் கோரமுமான நிலைமையில் ஒதுக்கப்பட்டிருந்தது. போலீஸ் விசாரணையில், அது சோமுவின் சரீரமென்று வக்கீல் சிதம்பரம் கொடுத்த வாக்கு மூலத்தால் வெளியாயிற்று. இந்தச் சமாசாரம் பரவவும் பலர் பலவிதமாக அபிப்பிராயப் படத் தலைப்பட்டனர். கொலை நடந்தது வாஸ்தவம். பிரேதத்தின் கழுத்தில் இரண்டு வெட்டுக்காயங்கள் இருந்தன. கொலை செய்தது யார்?

"கேஸ் போலீஸ் விசாரணைக்கு வந்து சேர்ந்தது. இக் குடும்பத்தைப்பற்றிய அபவாதம் மங்களபுரமெல்லாம் தெரியுமாதலால், போலீஸார்களுக்கு ஜானகி பேரிலும், தர்மராஜுபேரிலும் இயற்கையாய் ஸம்சயம் ஏற்பட்டது. ஜானகியை விசாரித்ததில், அவள், தான் அன்று மாலைக்குப்பிறகு தன்கணவனைத் பார்க்கவில்லை என்றும், தன் கணவனுக்கும் வேலைக்காரி சீதைக்கும் நேசம் இருந்ததாகவும், அதனால் சீதை விவாகமாகாத நிலைமையில் கர்ப்பமாகி விட்டதாக அன்று தெரிந்ததால் அதற்குக் காரணமான தன் கணவனைக் கடிந்துகொள்வதற்கு அவள் அவர் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்ததாகவும், இந்த ஸமாசாரம் தெரிந்த சீதை, வீட்டுவிட்டு ஓடிப்போய்விட்டதாகவும் தெரிவித்துக்கொண்டாள்.

"ஏதோ தற்சமயத்தில் போலீசார்கள் திருப்தி அடைந்து சென்றாலும், மூன்றாவது நாள், அவர்கள் 'வாரண்டு' சகிதம்வந்து ஜானகியம்மாளைப் பிடித்துச் சென்றார்கள். அதற்குள் அத்தோட்டத்தில் வீச்சரிவாள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அப்பொழுது போலீசார்களின் அனுமானம் என்னவென்றால்:—"செய்கை தினம் மாலையில் தம் மனைவியைக் கடிந்துசென்ற சோமு, மங்களபுரத்திலேயே தங்கி,

இரவில் தம் மனைவியும் தர்மராஜுவும் ஏகாந்தமாய் இருப்பதை நேரே கண்டுவிட வேண்டுமென்று ஒளிந்து, மறுபடி வீடு சென்றிருக்கவேண்டும்,—அப்படியே நேர்ந்து மிருக்கவேண்டும்.—இயற்கையாய்ச் சோமுவுக்கும் தர்முவுக்கும் கலகம் உண்டாயிருக்கவேண்டும்.—அதனல் சோமு கொலையுண் டிருக்கவேண்டும்.—பிறகு போலீஸுக்குப் பயந்து பிரேதத்தைத் தூக்கி வைகைப் பிரவாகத்தில் எறிந்துவிட்டுத் தர்மராஜு ஓடிப்போயிருக்கவேண்டும்.—ஜானகியம்மாளும் கொலையில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்,—குறைந்தது கொலையை மறைத்தற்காவது உடந்தையாக இருந்திருக்க வேண்டும்.—அதனல் தர்மராஜு ஓடிப்போனதும், ஜானகி வியாதியாய் விழுந்ததும் சரியாய்ப் போயிற்று.

"பிறகு இந்தக் கேஸ் மதுரை "ஸெஷன்ஸ்கோர்ட்"டில் விசாரணைக்குவந்தது. சிதம்பரம்தான் எதிரிதரப்பு வக்கீல். வேலைக்காரச் சங்கரன், தான் அன்று வீட்டைக் காத்துக்கொண்டிருந்ததாகவும், ஜானகியம்மாள் படுக்கைக்குச் செல்லும்வரை தனக்கு நன்றாய்த் தெரியுமென்றும், சோமு அன்று மாலைக்குப்பிறகு வரவேயில்லையென்றும் சொன்ன வாக்குமூலத்தாலேயே, ஜானகியம்மாளுக்கு அநுகூலமாயிற்று.

"கடைசியாக கவர்ன்மெண்ட் வக்கீல், தன் தரப்புக்கு அநுகூலமான விஷயங்களை எடுத்துப் பேசியபிறகு, சிதம்பரம் பேச ஆரம்பித்தார். "இவர் என்ன பேசப்போகிறார்!" என்று அங்கிருந்தவர்கள் மலைத்தார்கள். அநேகவிஷயங்களைப் பேசியபிறகு, கடைசியாக அவர், 'ஜானகியம்மாள், போலீஸார்கள் சொல்லுகிறபடி, கெட்ட செய்கையுடையவளென்று வைத்துக்கொண்டாலும்-ஆனல் அப்படிச்சொல்ல நான் துணியவில்லை.—வியவகாரத்துக்காக அப்படியேவைத்துக்கொண்டாலும்,-இக்கெட்ட செய்கையால்-அதாவது, எதிரிமேல் தோஷம் இருப்பதாக வைத்துக்கொள்ளுகிறோமே, அப்படிப்பட்ட கெட்ட செய்கையால், ஏற்படக்கூடியபலனை—அதாவது கர்ப்பம் முதலானவைகளை—மானத்திற்கஞ்சி மறைக்கப் பேருக்காவது தன் புருஷன் உயிருடன் இருக்கவேண்டுமென்று நினைக்கமாட்டாளா! கனவான்களே! இந்த எதிரியைப்பற்றித் தோஷம் சொல்ல என்னல் முடியாது. அவள்மேல் தோஷம் கற்பிக்க நான் துணியவில்லை.—ஒரு விவகாரத்துக்குச் சொல்லுகிறேன். இந்த ஒரு காரணமே போதும், இந்த எதிரி தன் புருஷனைக் கொன்றிருக்க

மாட்டாள் என்பதற்கும் கொல்ல இடமுங்கொடுத்திருக்கமாட்டாள் என்பதற்கும்.' என்று சொல்லி முடித்தார். கடைசியாக ஜானகியம்மாளுக்கு விடுதலையாயிற்று." என்பனவே. நிற்க.

அதன் பின்னர் நிகழ்ந்தவை இவை: கொஞ்ச நாளைக்கெல்லாம் தனக்கு ஏற்பட்ட அவமானத்தாலும், புருஷனை இழந்த சோகத்தாலும் பாவம்! ஜானகியம்மாள் வியாதியாயிருந்து மதுரையில் காலஞ்சென்றாள். ராமஸ்வாமி, வக்கீல் சிதம்பரத்தின், ஸம்ரக்ஷணையிலிருந்து முன் கூறியபடி நல்ல நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டு உத்தியோகம் பெற்று வேற்றூர் சேர்ந்தான். தர்மராஜு போனவிடம் போலீசார்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. மானத்திற்கஞ்சி ஓடிப்போன வேலைக்காரி சீதையும், வேலைக்காரன் சங்கரனும் போன இடமும் தெரியவில்லை. 'போலீஸார்கள்' எவ்வளவு பிரயாசைப்பட்டும் கொலையின் தன்மையையாவது, கொலையாளியையாவது கண்டுபிடிக்க முடியவில்லை. காலம் செல்லச் செல்ல 'மங்களபுரம் கொலைக்கேசு'ம் மற்றைப் பழங்கதைகள்போல் மனிதர் மனத்தினின்றும் விலகிற்று. நடந்தது நடந்துவிட்டதென்று இந்த விஷயத்தைச் சிதம்பரம் ராமஸ்வாமிக்குத் தெரியாமல் காத்துவந்தார். இப்படி 20வருஷங்களாயின." இவைநிற்க.

"இந்தக் 'கேஸ்' முழுமையும் வாசித்தோமே, 'பாலாம்பாள்' என்ற பெயரையே காணோமே. இவள் யாராக இருக்கலாம்!" என்று ராமஸ்வாமி சிந்திக்கலானான். பொழுதும் விடிந்தது.

விமலாதேவி.

"புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டம், முற்காலத்தே தன தான்யாதி சம்பத்துக்களுக்கு நிலைக்களமாயிருந்தது போலவே, கற்பிலும் வீரத்திலும் தியாகத்திலும் தேசாபிமானத்திலும் அரசியலுணர்ச்சியிலும் சிறந்த ஸ்திரீ ரத்நங்களுடையதாய், அருமையும் பெருமையுமிக்க செயல்களுக்கு நிலைக்களமாயிருந்தது" என்பதை இனிது விளக்குவது, இச் சரித்திர சம்பந்தமான தமிழ் நாவல். இது சாணக்கிய சாகஸத்தினும் இனிமையிற் றாழாதது.

விலை ரூ. 1—4—0.

ம. கோபாலகிருஷ்ணையர்,
2, ஆணிமுத்தம்மாள் ஸ்டோர்ஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி,

Our modern wisdom!

We call our fathers fools: so wise we grow
Our wiser sons will no doubt call us so.—A POET.

தற்காலப் போக்கு.

நம்முடைய முன்னோர் நனிமூடர் ஆவரென
அம்ம! உரைக்கின்றோம் ஆதலினால்—நம்மின்
அறிவுறுநம் மக்கள்,நமை அவ்வாறே சொல்வர்
இறையளவும் ஐயமே இல். ம. கோபாலகிருஷ்ணன்.

விடுகதை வினா.

ஐந்தெழுத்தா லொருபதிதா னாகும். அந்த
ஐந்தெழுத்தில் முதலீறும் 'திதி' யே யாம். அவ்
ஐந்தெழுத்திற் கடையிரண்டும் 'பதி' தா னாகும்.
அவ் வைந்தில் முன்னிரண்டும் 'திரு' வே யாம். அவ்
ஐந்தெழுத்தில் நாலிரண்டும் 'பரு' தா னாகும்.
அறை நான்கும் இரண்டொன்றும் 'பருதி' யாம். அவ்
ஐந்தெழுத்தில் ஆயதிருப் பதிதான் யாதோ?
அறைமின் அந்தத் திருப்பதியை அறிந்துதானே.

A. R. ஸ்ரீநிவாச முதலியார், ஆனைமலை

வைகாசி ஆனி மாத விடுகதைகளுக்கு விடை:

ஐகா சினிக்கருளும் ஆன்றநச்சி னார்க்கினிய!
வைகாசிக் கண்வேண்டி வந்ததற்கு—மெய்கால்
ஒருவா சகம்படைத்த உத்தமர்கள் போற்றும்
'திருவா சகம்' விடையாம் செப்பு. —து. சாம்பசிவன்.

ஆனைமலை வாசி ஏ. ஆர்.ஸ்ரீநி வாசஅண்ணல்
ஆனிமதிச் சஞ்சிகையில் ஆய்ந்துரைத்த—தான
விடுகதைக்குத் தக்க விடையாதோ என்னில்
'விடுகதை'யே யாகும் விளம்பு. — ஜயராமன்

பராந்தகன்

ஏழாம் காட்சி.

இடம்:—கள்வர் மனை.

காலம்:—இரவு 11-மணி.

பாத்திரங்கள்:—காமராச பாண்டியன், தங்கமுத்துத்தேவன், இருளன் முதலியோர்.

[காமராஜ பாண்டியனும் தங்கமுத்துவும் மாயாண்டித்தேவனுடன் ஒரு அந்தரங்க அறையில் வெகு நாழிகை பேசிவிட்டு வெளிவா இருக்கும் சமயத்தில், எங்கோ சென்றிருந்த இருளன் வருகிறான்.]

தங்க:—ஆரது கேக்காமெக் கொள்ளமெ உள்ளே நொளயாது ?

மாயா:—அம்ப ஆளுதான். வேத்தாளு நொளஞ்சு உசிரோடேயும் இருக்கமுடியும் ?

காம :—சரி. காரியம் சனுதியிலே முடியட்டும்.

தங்க:—தேவர்க்கு அம்ப அடிக்கடியா சொல்லணும் ?

மாயா:—மாயாண்டி 'சரி' இண்டா, முடிஞ்சிச்சுக் காரியம் இண்டே வச்சிக்குங்க.

தங்க :—அது நல்லாத்தெரியும். மகாராசா எதுக்குச் சொல்லிச்சு இண்டா, ஒரு மாசத்துக்குள்ளெயாவது காரியம் முடிஞ்சிடணுமிண்டுதான். தேவர் மொனஞ்சிட்டா ஒரு மாசம் என்னத்துக்கு? பத்துநாக் கூடப் போதும்.

மாயா:—ரோசிக்கவே மாணும் மாராசா.—இதுங்காட்டி எம்புட்டெம்புட்டோ உத்தரவாயிருக்கே. ஒண்ணுலெநாச்சும் குந்தகம் இருந்திச்சு இண்டு சொல்லுங்க.

காம:—சரி. அம்ப பேசினது செய்யப்போறது செஞ்சது எல்லாம் அம்பளுக்குள்ளேயே இருக்கட்டும்.

மாயா:—சொல்லணுமா ? எதுவும், ஈக்கும் காக்காக்குஞ்சுக்கும் கூடத் தெரியாமெ நடக்கும் போங்க.

காம:—நல்லது. சனிக்கிளமெயாவது நாயித்துக்கிளமையாவது நீ கேட்ட தொகையோடே வாரோம். இப்போதைக்கு இந்தா இது.

[விலையுயர்ந்த நகைகள் முத்து, பொன் நாணயம் முதலியன தருகிறான். பிறகு அவனும் தங்கமுத்துவும் செல்லுகிறார்கள். அவர்கள் தலைமறைந்ததும்]

இரு:—இவுக ஆரு?

மாயா:—ஒக்காரு சொல்ரேன். சரிகையும்பட்டும்நகையுமா வந்தவக, காமராசபாண்டியர். அவுக அம்ப ராசாவுக்குக் கிட்டின உறவு. ஏதோ ஒரு ஊருக்கு ராசாவாம் அவுக.

இரு:—அவுக கூடவந்த ஆளு?

மாயா:—நீ தெரிஞ்சுக்கல்லியா? மடங்க, சமீன்க, சமஸ்தானங்க இன்னதிண்டே ஒனக்குத் தெரியாதுபோலிருக்கு. மாராசா இண்டு இருந்தால்,—அவுக ஆசைப்பட்ட பொம்பிளெகளெச் சரிபண்ணிக் கிட்டுவரவோ, அவுக இணங்காட்டி 'அல்லாக்க'த் தூக்கிக்கிட்டு வரவோ, தங்களுக்கு வேண்டாதவங்களெ வேலெயெச் சாய்க்கறத் துக்கோ, அம்பளெப்போல வேண்டியவைகளோடே செநேதம் செஞ்சுவைக்கவோ, இன்னும் எம்புட்டு எம்புட்டு வேலைக்கோ—கொல்லுக் கொலைக்கஞ்சாத கையாளுக வேண்டாமா? அவுகளிலே ஒருத்தரு அந்தஆளு. அவுக பேரு தங்கமுத்துத்தேவர் 'தங்க முத்து'இண்டு பேருவச்சவங்க வாய்க்குச் சக்கரைதான் போட ணும். தங்கமும் முத்துமா அவுக உதவியாலெதான் அம்பளுக் குக் கெடைக்கிறது. அம்புளுக்கு அவுகளும் ஒருநல்ல துப்பாளு. அவுக வந்து சொல்லவேண்டியதுதான். சொன்னவுக சொத்து அம்புளுதுதான்.—என்ன ரோசிக்கறே?

இரு:—வேறொண்ணுமில்லெ, இம்புட்டுச் சொத்துச்சேர எம்புட்டுக் களவுக நடந்திருக்குமிண்டுதான் ரோசிச்சேன்.

மாயா:—(இகழ்ச்சியும் கோபமும் தோன்ற) என்ன சொன்னே? எம்புட்டுக் களவுக இண்டா? தூத்தேரி! மீசி மொளச்ச ஆம்ப ளெக—அம்பளெப்போல இருக்கா ஆம்பளெ சிங்கங்க—களவா செய்வாக? நாம என்ன கொள்ளெக்காரங்களா? முடிச்சவிக்கி களா? மொல்லமாரிகளா? களவாணிப்பயகளா? கன்னம்போடாவு களா? கெட்டாங்க அந்த சின்னச்சாதிப்பயலுக. அவுகளா நாம்?

இரு:—(சிரித்து) இல்லேங்க அவுகளுக்கும் கேடானவுக. இல்லாட்டி ரொம்ப ரோக்கியங்களோ? சட்டம், சாத்திரம், பள்ளிக்கூடம், ரொம்ப ரொம்பப் பார்த்துத் திருந்தியவங்க ளாக்கும்?

மாயா:—கேடானவக இண்டியே, எப்படிச் சொல்லு. கேப்போம்.

இரு:—எப்படியா? நீங்க சொன்ன மொல்லமாரி, முடிச்சவிக்கி, கன்னம் போடாவகளெல்லாம் அடிச்சுகிட்டுப் போர சொத்தை ஒடனே இல்லாட்டி, என்னிக்காவது, ஒண்ணுக்குப் பத்தா,

நூறு, ஆயிரமாக்கூடப் பறிகுடுத்தவக சம்பாதிச்சுக்கிடலாம். நாம கொள்ளேயடிக்கிற சோத்தோ, ஒருதரம் போச்சிண்டாப் போயே போச்சு. அது, கொள்ளேயடிச்ச அம்பளாலும் திருப்பிக்குடுக்க முடியாத உசிர் இல்லே! இதுனுலேயே கேடுகெட்ட கொலேபாதகக் கொள்ளக்காரக் களவாணிகளில்லியா நாம?

மாயா:—இருளா! எது ஒனக்கு ரொம்ப ரொம்ப ஞானம் முத்திடுச்சு? சரி, அப்புறம்?

இரு:—கோச்சுக்காதேக. அம்புளுக்குள்ளே பேசிக்கிவோம். இன்னிக்கில்லாட்டி என்னிக்காவது நாம சாகப் போறவங்கதானே! நாம, இப்போ இங்கே மனிசனுக்குத் தப்பிச்சுக்கிட்டாலும், செத்தபொறகாவது, அம்பளேப்படச்சவனுக்குச சவாபு சொல்லணுமே. சாமி, வயருவளக்கத்திருடற கள்ளப்பயகளே அதிகமாத் தண்டிக்குமா? மானங்கெட்ட கொலகாரப்பயகளேத் தண்டிக்குமா? அதிகத்தண்டனே ஆருக்கிருக்கும்? நீங்களே சொல்லுங்க.

மாயா:—ஐயைய! அறியாமலில்லெ உன்னே நாங்க நம்பிச் சேத்துக்கிட்டுட்டோம்! இம்புட்டுப் பயங்குளியா நீ!

இரு:—என்ன சொன்னீங்க? பயங்குளியா? நானு? இருக்கட்டும். பாக்கிறீகளா என் தயிரியத்தை? சொல்லுங்க இப்பவே? ஆர் தலேயைக் கொண்டாரட்டும்? எம்புட்டுப் பேரை யின்டாலும் முளுமூச்சாக் கொண்டே தீக்கறேன். நான் கேட்டபடி எவனுவது கேட்டா, நீங்க சவாபு சொல்லணு மிண்டில்லே உங்களேக் கேட்டேன்.

மாயா:—அதுவுஞ்சரி, ஆனு உனக்குப் புத்திகித்தி இல்லியா? சாமியாவது? பூதமாவது? புண்ணியமாவது? பாவமாவது? மானமாவது? அகுமானமாவது? இதுகளெல்லாம் கையாலாகாத கம்மனுட்டிக பேச்சில்லே? சாத்திரம் சட்டம், பள்ளிக்கூடம் இதுகளிலே எதுனுலேநாச்சும் மனிசனுக்கு நன்மை தின்மை தெரிஞ்சிடுமிண்டா நெனக்கறே? இதெத் தெரிஞ்சுக்கோ மொதமொதல்லே: மனிசன் எதை ஒரு சமயம் 'மானம்' இங்கரானே அதெயே இன்னொரு சமயம் 'அகுமானம்' 'அகவுரவம்' இம்பான். வலியவங்க செய்யாது அக்ருவமா இருந்தாலும் அது 'மானம்'; 'கவுரவம்'; 'மதிப்பு'; 'ரோக்கியதை'. எளச்சவங்கசெய்யாது சரியா இருந்தாலும் அது 'அகுமானம்'; 'அகவுரவம்'. இதை, நம்பளே ஆளுகிறவகிட்ட இருந்தே

படிச்சுக்கலாம். அவுக எதுவும் செய்யலாம். நாம் செஞ்சாத் தான் அது 'சட்டவிரோதம்'; 'அகுமானம்'. ஆளுகிறவுக சங்கதி இருக்கட்டும். அம்ப சங்கதியெப் பேசுவம். அம்பதொளில் அகுமானமும் அகவுரமுள்ளதிண்டா எண்ணறே? எங்கே, மானமுள்ளதொளில் எது? சொல்லு கேப்போம். மானம் அகுமானமின்ன திண்டு தெருத்தெருவாப் போய்க்கேளு; தெரியும் அப்பத்தான். வட்டி, வட்டிக்குமேலே குட்டி, வாங்கர லேவாதேவி செய்ரவக, 'கோடி கோடியாக் குவிப்பதிலேதான் மதிப்பு' இம்பாக. பொம்பளைப்பித்துப் பிடிச்சவங்களும் டம்பாசாரிகளும் இதை ஒப்புவாங்களா? "பாத்தவுடனே சொக்கி விளச்செய்ர பொம்பளைகளுக்கு மத்தியிலே இருக்கிறதுதான் மதிப்பு" இம்பாங்க. அம்ப ராசா இருக்காரே ராசா— அவுக பட்டாளத் தலைவனைக் கேளு; இதிலே ஆர் சொல்ரதாவதுசரி இங்கரான் பாரு. "மதிப்பும் பெருமையும் பகையாளி[illegible]ரைச் சுட்டுக் கொளுத்திப் பாளாக்கறதும்,மலைபோல மனிசாளையும் குஞ்சு கொளந்தை பொம்பளைகளையும் வெட்டிவெட்டிச் சாய்க்கிறதும்தான் மதிப்பு" இண்டு கூசாமச்சொல்வன். படிச்சவுககிட்டப்போய்க்கேளு."இம்புட்டுப் புத்தகம் எளுதணும்; இம்புட்டுப் புத்தகம் படிக்கணும்; இம்புட்டுப் பேர் படிச்சவுக இண்டு சொல்லணும்; அதிலெ இல்லெ மதிப்பு இருக்கு" இண்டு சாதிப்பாக. சாமியார்களைக் கேட்டா "பொம்பளெப் பிசாசுக மூஞ்சிலே முளிக்காதிருப்பதேமதிப்பு" இம்பாங்க. எவ்வளவுக்கெவ்வளவு எத்தனை எத்தனை பணக்காரப்பயகளைச் சிக்கவச்சு ஒட்டாண்டியாக்கராளே அவ்வளவுக்கவ்வளவு தேவடியாளுக்குப் பேரும் மதிப்பும்; அவ காலடியைச் சுத்தரவங்க தொகையும் அதிகப்படுதுபாரு. நான் சொல்ரதெல்லாம் சரியா இல்லியா? இதனாலே என்ன தெரியுது? ஒத்தருக்கு 'மதிப்பு' இண்டு எது இருக்கோ' அது, மத்தொத்தருக்கு இல்லே. மானம் இங்கரதும் அகுமானம் இங்கரதும் அவுக அவுக எண்ணத்தைப் பொறுத்தது இண்டு நீ நம்பினா, என் கொலைகாரங்களான நமக்கு, "எத்தனை எத்தனை உசிருக்கு உலை வைக்கரோமோ அத்தனைக்கு அத்தனை மதிப்பு" இண்டு நீ எண்ணக்கூடாது? செய்யர காரியம் எதுவாயிருந்தாலும் அதெத்திரச் சப்சாடாவா தீக்கரதுலேதான் மதிப்பு. நல்லாத் தெரிஞ்சுக்க.

இரு:—(தனக்குள்) பழியாவத்துக்கஞ்சாப் படுபாவி! நீ மட்டும் சிரஞ்

சிவிபோளும்! 'மதிப்பு, அவர்களவர்கள் எண்ணத்தைப் பொறுத்தது' என்றுயல்லவா? நிரம்ப சரி. என் எண்ணத்தைப் பொறுத்த மதிப்பு என்னது என்று அதிவிரைவில் காட்டுகிறேன்.

மாயா:—என்ன இருளா ரோசிக்கிறே? இன்னும் எதுநாச்சும் கேக்கணுமிண்டாக் கேளு. சொல்றேன்.

இரு:—இம்புட்டுப் போதாதா? நீங்க சொன்னது அம்புட்டும் சரி இண்டுதான் எண்ணிப்பார்த்து ரோசிச்சுக்கிட்டு இருந்தேன். இதெல்லாம் இருக்கட்டும். என்னென்னவோ பேசிப் பேசி அம்ப பேசுக்கிட்டு வந்த விசயத்தை விட்டுவிட்டோம்.— வந்த ரெண்டு ஆளுகளும் எதுக்காக வந்தாக?

மாயா:—சனுதிலே, காதுங் காதும் வச்சதுபோல ஒரு காரியத்தை முடிச்சுத் திரணுமாம். 'சரி' இண்டு ஒப்பக்கிண்டுட்டேன். ஆனா 'அது எப்படி முடியும்? எப்ப முடியப்போறது?' இண்டுதான் ரொம்ப ரொம்ப ரோசனையா இருக்கு.

இரு:—அந்தத் தலைபோற காரியம் என்ன! லவுக்கினு சொல்லுங்க சேதியை. நானே, இப்பவே, முடிச்சுப்பிட்டு மறுகாரியம் பார்க்கறேன். எந்த மொரட்டுத்தடியனை அவுகளுக்காக ஒப்பேத்தணும்?

மாயா:—ஆம்பளையைக்கூட இல்லே. ஒரு பொம்பளையைத்தான். ஆனா அதுதான் ரொம்பக் கைட்டமா இருக்கு. எப்படியாவது ஒரு மாசத்துக்குள்ளேயாவது வேலையெத் தீத்திடணும்.

இரு:—தூ! இருந்திருந்து ஒரு பொம்பளையையா! இதுக்கா இம்புட்டு ரோசனையும் பயமும்!

மாயா:—எங்கே, நீ போய் முடிச்சுக்கிட்டுவா, பார்ப்போம்.

இரு:—உசுரு போனாலும் நான் போகமாட்டேன்: பொம்பளையை அடிச்சுப்போடறது வீரமா? நாலுபேர் கேட்டா சிரிக்கப் போறாங்க.

மாயா:—எப்பவும் நீ எதிலேயும் அவசரப்பட்டு ஏதாவது உளறிக்கிட்டே இருப்பே. கேளு முழுச்சமுசாரமும். அப்புறம் பேசு.

இரு:—சரி சொல்லுங்க.

மாயா:—அம்ம ராசாவுக்குப் புள்ளெகுட்டிக கெடயாது. அளகான குட்டி ஒருத்தி யிருக்கா. அது மகாராசாவுடைய தம்பி மக. மாராசாவுக்குப் பொறகு அதுக்கும் அதெக் கட்டிக்கிறவனுக்கும் தான் ராச்சியம். அது கண்ணாளமாகாதே செத்துப்போச்சிண்டா, நம்ம காமராச பாண்டியர்க்குத்தான் பட்டம். இப்போ

இந்தப் பொண்ணுக்கு கண்ணுளமாக ஏற்பாடாயிக்கிட் டிருக்கு. காமராச பாண்டியர் தங்கமுத்துத் தேவர் மூலம் என்னென்ன மோ ஏற்பாடுக செஞ்சும், அது அவுகளைக் கட்டமாட்டேனின்டு முரட்டுப்பிடி பிடிக்கிறதாம். அது வேறே எவனையாவது கட்டிக் கிட்டாலும், உசிரோடே இருந்தாலும், காமராசருக்குப் பட்ட மும் ராச்சியமு மில்லாமே போயிடாது. அதுனலே எப்பாடுபட்டு னும் அதைத் தொலைச்சுத் தீரவேண்டியிருக்கு. அது செத் தது, காமராசருக்குப் பட்டம்; அம்மளுக்கு வேணுமிங்கர சொத்து.

இரு:—அப்படி இண்டா, நானே, இப்பவே, பொறப்பட்டிடட்டா?

மாயா:—இப்பப் போனக் காரியம் ஆகாது.

இரு:—என்னலே கூடவா?

மாயா:—என்னலும் முடியாது. தலைலெ கொம்பு மொளச்சவக ளாலேகூட முடியாது.

இரு:—ஏன்? என்னத்துனலே?

மாயா:—என! அம்ப ராசாவுக்கு அநேகம்பேர் விரோதிக. அம்பளே விரோதிக தானே? அந்தப் பெண்ணை அடிச்சுக்கிட்டுப்போக ஆளுக காத்திருக்காக. இது ராசாவுக்கு தெரியும். அதுக்காக அது இருக்கிறஇடத்தைச் சுத்திக் கத்தியும் கையுமாக ஆளுகளைக் காவல்வச்சு இருக்காங்க.

இரு:—அப்படி இண்டா, என்னிக்கு, எப்படி, அம்பகிட்ட அகப் பட்டுக்கும் அது!

மாயா:—மாராசாவுக்கு ஒரு சிங்காரத் தோட்டம் உண்டு. அதுலே அவுக கும்பிடர சாமி வைச்சிருக்கிற கோவிலிருக்கு. நல்ல புரு சன் கிடைக்கணுமிண்டு நேந்துக்க அந்தப் பொண்ணு, வெள்ளிக் கிளமை வெள்ளிக்கிளமை அந்தக் கோவிலுக்குப் போகும். அப்போ அரமனையிலேயிருந்து போகிற வளிகளிலும், அந்தத் தோட்டம் முளுக்கவும் எள்ளு விள எடமில்லாமே பிச்சக்காரங்க, சாமிகும்பிட வாரவக, போலீசுப் புலிக, ராசாவுடைய ஆளுக, அந்த பொண்ணுடைய அளகைப்பாக்க ஆசைப்பட்டு வருகிறவக, அம்பிட்டுப்பேரும், அதுபோய்ச் சாமிகும்பிட்டுத் திரும்பிவரும் வரைக்கும், நெரிஞ்சு இருப்பாக—இப்படி இருக்கு விசயம். எப்படி அம்ப காரியம் முடியும்? சொல்லு. ரோசிச்சு ரோசிச்சுப் பார்க்கி றேன்—எனக்கு ஒண்ணும் இப்போதைக்குத் தோணலை.

இரு:—ரோசனை என்ன? பார்க்கிரீகளா என் சாமார்த்தியத்தை!? அது ஒண்டிசண்டியாயிருக்கிறபோது கூடப்போகாமே அம்புட்டுப்பேரும் நெறஞ்சிருக்கிற சமயத்திலே, அடுத்த வெள்ளிக்கிளமையே நான் ஒத்தனுப் போறேன்.

மாயா:—ஆருதான் போகமாட்டாக? போரவக அகப்பட்டுக்குவாக. அப்போ காரியங் கெட்டே போகும்.

இரு:—அப்படியா சொன்னேக? அப்பவேபோய் உங்க காரியத்தை முடிக்காட்டி எம்பேரு இருளன் இல்லெ. சத்தியமா இப்பவே எனக்குத் துருதுரு இங்காது.

மாயா:—(மகிழ்ந்து) சரி. ஒன் ஆசையைத்தான் ஏன் கெடுக்கணும்? (ஆயுதசாலைக்கு அழைத்துச் சென்று) இந்தா இந்தக் கத்தியும் ஈட்டியுமுள்ள திருகுதடி. ஈட்டிப்பிடிகிட்ட இருக்கு விசம். சாக்கிறதே. சமயம் பார்த்து அந்தக் குட்டியை ஒரு இருத்து இருத்து இந்த ஈட்டியினாலே. இருத்தா இருத்துலெ, ஈட்டி, கைப்பிடி வரைக்கும் பசக்கிண்டுபாயணும். பாஞ்சதுதான் தாமசம். அழுத்து தக்கையெ. சிவ்விண்டு ஏறும் விசம் தலைக்கு. பிடுங்கு ஈட்டியெ. அத்தோடே தொலஞ்சா அவ. ஓடியாந்திடு.

இரு:—சரி. இம்புட்டே போதும். (திருகுதடியைப் பெற்றுக்கொண்டு) நான் பாத்துக்கரேன் இனிமே.—ஒரு சமுசாரம்—நான் காரியத்தை முடிச்சிட்டாலும், (நீங்க பயப்பட்ரபடி) ஒரு வேளை எக்கச்சக்கமா அகப்பட்டுக்கிட்டாலும், சிட்டி அடிக்கிறேன். உதவிக்கு ஓடியாந்திருங்க நானிருக்கும் எடத்துக்கு. நீங்க வந்தாத்தான் எனக்குத் தயிரியமா இருக்கும். அங்கே இங்கே பராக்குப் பார்த்துக்கிட்டு நிண்டிடாதேங்க. வேசம் மாறி எம் பொறகே நீங்க வந்துக்கிட்டே இருக்கணும். நான் சொன்ன எடத்திலெ நிக்கணும். சிட்டி அடிச்ச உடனே என்கிட்டே ஓடியாந்திடணும்.

மாயா:—சரி. என்ன இண்டாலும் நீ இந்தத் தொழிலுக்கு நாங்க அறிஞ்சவரை புதிசானதுனாலே, நானும், நீ சொல்லாட்டிக்கூட வேசம்மாறி ஒன் பின்னாலே வரத்தான் இருந்தேன். வாரேன். வாரேன். பயப்படாதே.

இரு:—சரி. இனிமே நான் என் காரியத்தைப் பாத்துக்கறேன். உங்க காரியத்தை நீங்க பாருங்க. போங்க. [இருவரும் செல்லுகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

திருக்குடந்தை: ஆபக்கண்ணனார்